உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 12 மாதம் 5



## இயேசு உங்களை மன்னிப்பார்

நவம்பர் 2013

ஏ.எஸ்.வி. ராபின்

# கடந்த மாதம் இயேசுவின் கிருபையினால்
# ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் தேவசெய்தி கொடுத்த இடங்கள்



சி.எஸ்.ஐ. ஆலயம், முடிச்சூர் (சென்னை)
நாள் : அக்டோபர் 20 ஞாயிறு ஆராதனை



சபை ஊழியர் தங்கதுரை அவர்களுடன்
ஏ.எஸ்.வி. ராபின்

## இயேசுவின் சமாதானம் பரவசப் பாடல்கள் – பாகம் 2

# என் இயேசு..

கர்த்தர் இயேசுவின் கிருபையால் நவீன இசையில் உருவாகிக் கொண்டிருக்கும், உள்ளத்தை இயேசுவிடம் திருப்பும், இனிமையான ஆடியோ சிடி, விடியோ சிடி 2013 ல் வெளிவர ஜெபித்துக்கொள்ளுங்கள்.

பாடல். ராகம் & பாடுபவர்கள்
ராஜ்லின்ட் ராபின்
ஏ.எஸ்.வி. ராபின்



( இசை : ஜி.எம். ஞானகுமார், டிவைன் மெலடிஸ் )







இயேசுவின் சமாதானம்
பரவச நேரம்

தமிழன் டி.வி.யில்

இமயம் டி.வி.யில்

காலை 7.15

| நவம்பர் | |
| --- | --- |
| 11 | 25 |
| திங்கள் | |

ஒவ்வொரு 2வது, 4வது திங்கட்கிழமைகளிலும்

ஒவ்வொரு 2வது, 4வது செவ்வாய்க்கிழமைகளிலும்

| நவம்பர் | |
| --- | --- |
| 12 | 26 |
| செவ்வாய் | |




தேவ செய்தி & ஜெபம் ஏ.எஸ்.வி.ராபின் & பொற்செல்வி ராபின்

# அன்புக் கடிதம்...

**உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16 : 20)**



**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

இந்த ஆண்டில், கடந்த 9 மாதங்களாக நம் உயிரை காத்து தந்த தேவாதி தேவன் இயேசுவை மகிமைப்படுத்துவோம். நாம் ஒவ்வொரு நொடிப் பொழுதும் உயிரோடு இருப்பது, தேவனாகிய கர்த்தர் இயேசுவின் இரக்கத்தினால் மட்டுமே. இவ்வுலகில் நம் மூச்சு இருக்கும் வரை இயேசுவுக்கு பிரியமாய், பிறருக்கு ஆசீர்வாதமாய் வாழ்வோம்.

உலகில் அன்பு குறைந்து அநியாயம், அக்கிரமம் பெருகிக் கொண்டே வருகிறது. ஆகவே கொலை, கொள்ளை, தீவிரவாதம், நம்பிக்கை துரோகம், விபச்சாரம், நாளுக்குநாள் அதிகரிக்கிறது. குடும்பங்கள் உடைகின்றன. வாலிபப்பிள்ளைகள் சீர்கெட்டு தேவனை மறந்து வாழ்கின்றனர். மனிதர்களுக்குள் புகுந்து கொண்டு இதை செய்பவன் சாத்தான்.

நாம் தினமும் விழிப்பாய் இருந்து ஜெபித்தால்தான், சாத்தானின் இந்த தந்திரங்களை அழிக்க முடியும். நம் ஜெபமும், நம்முடைய முன்மாதிரியான வாழ்வும் தேவன் யார் என்று அறியாத மக்களை இயேசுவை தேடி வரச் செய்யும். நம் அன்பு மூலம், நமக்குள் இருக்கும் இயேசுவை அனைவருக்கும் வெளிப்படுத்துவோம். எல்லோரும் நலமாய் வாழ ஜெபிப்போம்.

நாங்களும் இயேசுவின் சமாதானம் ஜெபக்குழுவினரும் உலக மக்களுக்காக, உங்களுக்காக அனுதினம் ஜெபிக்கிறோம்.

தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
திரியேக தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

**With Deep Love & Affection With Prayer**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

- ஏ.எஸ்.வி. ராபின்.



உடைந்த உள்ளங்களுக்கு இயேசுவின் சமாதானம் மாத இதழ்

**Final Designing & Editing**

ராஜ்லின்ட் ராபின் B.Sc.,Vis.com., (M.B.A.)

Managing Partner, Rajlynt Exports & Imports



# இயேசு உங்கள் பாவங்களை மன்னிப்பார்

ஏ.எஸ்.வி. ராபின்

பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு (இயேசுவுக்கு) அதிகாரம் உண்டு. (மத்தேயு 9:6)

இவ்வுலகில் பாவம் செய்யாத மனிதர்கள் யாரும் இல்லை. நம்முடைய பாவங்களை மன்னிக்க மனுஷரூபம் எடுத்த தேவாதி தேவன் இயேசு ஒருவருக்கே அதிகாரம் இருக்கிறது. ஏனெனில் இயேசு நம்மை படைத்தவர் மட்டுமல்ல அவர் பாவம் இல்லாத மகா பரிசுத்த தேவன்.

## நாம் செய்யும் பாவங்கள்

நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1யோவான் 3:4). பைபிள் வசனத்திற்கு விரோதமாக, இயேசு தரும் கட்டளைக்கு விரோதமாக நாம் செய்கிற அனைத்தும் பாவம். நாம் நம் முழு இருதயத்தோடு தேவனை நேசித்து, நம்மை நேசிப்பது போல பிறரையும் நேசிக்க வேண்டும். இல்லையென்றால் இதன் மூலம் ஒவ்வொரு பாவமும் உருவாகும். தேவனிடத்தில் அன்பு செய்யாததால், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாததால், ஆதாம், ஏவாள் செய்தது இவ்வுலகின் முதல் பாவம். அநேகர் கொலை, விபச்சாரம் மட்டும்தான் பாவம் என நினைக்கிறார்கள். இதற்கு இணையான பாவங்கள் உலகில் பெருகிவிட்டன. நம் நினைவில் பாவ சிந்தை இருந்தாலே, அது பாவமாக கருதப்படும். (மத்தேயு 5 :28) என்று இயேசு சொல்கிறார். நாம் பிறருக்கு நன்மை செய்யாவிட்டால் அது பாவம். (யாக். 4:17) கோள் சொல்லுதல், கலகம் செய்தல், நான் என்ற திமிர் அதுவும் பாவம் (1 சாமு. 15 : 23). பிறர் நலமாய் வாழ நாம் ஜெபம் செய்யாவிட்டால், அது பாவம். (1 சாமு 12 : 23) இது போல பல பாவங்களை பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம். பாவத்தில் சிறிய பாவம், பெரியபாவம் என்று இல்லை. கர்த்தர் இயேசுவின் பார்வையில் எல்லாம் ஒன்று தான்.

## பிறரை மன்னிப்போம்

நாம் இயேசுவையும் பிறரையும் நேசித்தால், மனிதர்கள் நமக்கு விரோதமாக தீங்கு செய்ய நினைக்கும் போது, அல்லது தீங்கு செய்யும் போது நாம் அவர்கள் குற்றங்களை மன்னிக்க முடியும். நமக்கு கோபம் வராது. மனுஷனுடைய விவேகம் அவனுடைய கோபத்தை அடக்கும். குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை. (நீதி. 19 : 11). பிறரை நாம் மன்னிக்காவிட்டால், பரிசுத்த ஆவியாகிய இயேசு நமக்கு இல்லை என்று அர்த்தம்.

இயேசுவிடம் நன்மை பெற்றவர்கள், அவர் செய்த அற்புதங்களை நேரில் பார்த்தவர்கள் இயேசுவை சிலுவையில் அடிக்கச் சொன்னார்கள். அவரை கிண்டல், கேலி செய்தார்கள். ஆனாலும், இயேசு, பிதாவே இவர்களை மன்னியும் (லூக். 23 : 34) என்றார். அண்ட சராசரங்களையும், நம்மையும் உருவாக்கிய இயேசுவே, பிறரை மன்னிக்கும் போது, நாம் பிறரை மன்னிக்காவிட்டால் நமக்குள் நாம் இயேசுவை விட பெரியவர் என்ற எண்ணம் இருக்கிறது என்று அர்த்தம். அந்த எண்ணம் சாத்தானுடையது.



நாம் நம்முடைய தேவை, ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவர் இயேசுவிடம் ஜெபிக்கும் போது பிறரை மன்னிக்காவிட்டால், பரலோகத்தில் இருக்கிற நம் பிதாவாகிய தேவனும், நம் பாவங்களை மன்னிக்க மாட்டார். ( லூக் 11 : 26 ) நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்காது. ஆகவே நாம் எல்லா மக்களையும் மன்னிப்போம்.

## நான் செலுத்திய அபராதம்

தெரிந்து பாவம் செய்து, இயேசுவிடம் மன்னிப்பு கேட்டு மீண்டும் பாவம் செய்து மீண்டும் இயேசு மன்னிப்பார் என்று நினைத்தால் இயேசு நம் பாவங்களை மன்னிக்கமாட்டார். 9 வருடங்களுக்கு முன் ஒருமுறை சென்னை சென்ற போது தி.நகர் அருகில் ஒரு ரோட்டில் ஒருவழிப்பாதை (ஒன் வே) என்று தெரியாமல் காரை ஓட்டி சென்றேன். அங்கே டிராபிக் போலீஸ் அனைவரிடமும் அபதாரம் வசூலித்துக் கொண்டிருந்தார். என்னிடம் விசாரித்து நான் கோவையிலிருந்து வந்திருக்கிறேன் எனக்கு ஒன்வே என்பது தெரியாது என்பதை அறிந்து என்னை மன்னித்து அனுப்பிவிட்டார்.



2 வருடங்களுக்குப் பின் கோவையில் ஒரு ஒன்வே ரோட்டில் அவசரமாக இரவு 9 மணிக்கு காரை ஓட்டி சென்றேன். டிராபிக் போலீஸ் என்னை நிறுத்தி விசாரித்தார். நான் கோவையில் 23 வருடங்களாக வசிக்கிறேன். ஒன்வே என்று தெரிந்து தான் அவசரமான வேலைக்காக ஒன்வேயில் வந்து விட்டேன் என்று சொன்னேன். நான் தெரிந்து தவறு செய்ததால், இங்கு அபாராத தொகையை காவல் துறையினர் என்னிடம் வாங்கினர். இது உலக நீதி. பரலோக தேவன் இதை விட கண்டிப்பானவர். தெரியாமல் செய்யும் தவறு, பாவங்களை தேவன் மன்னிக்க அவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், பாவம், அநியாயம் அக்கிரமம், நீதி, எல்லாம் தெரிந்து துணிகரமாக பாவம் செய்தால் இயேசு நம்மை மன்னிக்க மாட்டார். துணிகரமான பாவங்களுக்கு உமத அடியேனை விலக்கிகாரும். (சங் 19 : 13)

## இயேசு நம்மை மன்னிப்பார்

தாவீது சொன்னது போல, கர்த்தாவே என் அக்கிரமம் பெரிது, உம்முடைய நாமத்தின் நிமித்தம் என்னை மன்னித்தருளும் (சங் 25 : 11) என்று, நாம் நம்மை தேவ சமுகத்தில் தாழ்த்தி நாம் செய்த, செய்து கொண்டிருக்கிற எல்லாப் பாவங்களையும் இயேசுவிடம் சொல்லி, இனிமேல் இந்த பாவங்களை செய்ய மாட்டேன் என்று கெஞ்சிவோம். பின்பு இயேசுவைப் போல, பரிசுத்தமாய் வாழக் கற்றுக்கொள்வோம். தெரிந்து பாவம் செய்து, இயேசுவிடம் மன்னிப்பு கேட்டால், இயேசு மன்னிப்பார் என்று நினைத்தால் இயேசு நம் பாவங்களை மன்னிக்கமாட்டார். முதலாவது நம்மை படைத்த தேவன் இயேசுவுக்கு உண்மையாய் வாழ்வோம். இரண்டாவது நம் குடும்பத்திற்கு உண்மையாக வாழ்வோம். மூன்றாவது நம் வேலை, வியாபாரம், தொழில், ஊழியம் மற்ற மக்களிடம் உண்மையாய் இருப்போம் அப்பொழுது. இயேசு நம்மை ஆசீர்வதிப்பார்.



நாம் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வோம். அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வோம். (அப் 2:38) மட்டுமல்ல இயேசுவை ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள், தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, இயேசுவின் முகத்தை தேடி பாவங்களை விட்டு திரும்ப வேண்டும். அப்பொழுது நம் பரலோகத்தில் இருக்கிற தேவன் இயேசு நம்மை மட்டுமல்ல நாம் வாழும் தேசத்தையும் ஆசீர்வதித்து உயர்த்துவார். (2நாள7:14) ஆகவே இப்பொழுதே நாம் நம் எல்லா பாவங்களையும் விட்டுவிட்டு இயேசுவைப் போல பரிசுத்தமாய் வாழ்வோம்.




visit our website

peaceofjesus.org

(or) peace of jesus (or) asv robin



இதன் மூலம் இந்தியா மற்று உலக தேசமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.




பைபிளும், நாட்டு நடப்பும்

# நூதனக் கொள்ளை

கடைசி நாட்களில்... பணப்பிரியராயும் இருப்பார்கள் (2தீமோ 3:1.2).

ஏ.எஸ்.வி. ராபின்

பல வகையான கொள்ளைகளைப் பற்றி கேள்விப்படுகிறோம். இந்நாட்களில் வருமான வரி அதிகாரி போல் நடித்து கொள்ளையடிக்கும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

## பஸ்சில் பயணம்

சமீபத்தில் நகைக் கடை வைத்திருக்கும் ஒருவர், தன்னிடம் வேலை பார்க்கும் 2 பேரிடம் 2 கோடியே 10 லட்சம் மதிப்புள்ள நகையை கொடுத்து அனுப்பியிருக்கிறார். இந்த நகைகள், வெளியூரில் இன்னொரு கடைக்கு ஆர்டரின் பேரில் கொடுக்கப்பட வேண்டிய நகைகள். இரவு நேரத்தில் இருவரும் ஒரு ஓம்னி பஸ்ஸில் இந்த நகைகளை கொண்டு சென்றனர்.

## பஸ்சில் சோதனை

பஸ் சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று பஸ்ஸின் முன்னால் ஜீப் ஒன்று வழி மறித்துக் கொண்டு நின்றது. அதிலிருந்து டிப்டாப்பாக உடை அணிந்த 6 பேர் பஸ்சில் ஏறினார்கள். நாங்கள் வருமான வரி அதிகாரிகள், இந்த பஸ்ஸில் கோடிக்கணக்கான மதிப்புள்ள தங்க நகைகளை கடத்தி செல்வதாக, எங்களுக்கு தகவல் வந்தது. இவ்வாறு சொல்லிக் கொண்டே பயணிகளின் சூட்கேஸ் மற்றும் பேக்கை சோதனை செய்தனர். அப்பொழுது வியாபாரத்திற்காக அந்த 2 பேரும் தங்க நகைகளை பேக்கில் வைத்திருந்ததை இவர்கள் பார்த்து, விசாரணை என்று கூறி, பஸ்ஸை விட்டு



அவர்களை கீழே இறக்கினார்கள். பஸ் டிரைவரிடமும், கன்டக்டரிடமும் நீங்கள் பஸ்சை எடுத்து செல்லுங்கள். இவர்களிடம் விசாரணை செய்ய வேண்டியதாய் இருக்கிறது என்றனர்.

## கடத்தல்

பின்னர் இந்த 2 பேரையும் ஜீப்பில் ஏற்றிக் கடத்திச் சென்று, கை கால்களைக் கட்டி வாயில் துணியை திணித்து ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் ஜீப்பிலிருந்து ரோட்டு ஓரத்தில் உருட்டி விட்டனர். பின்னர் இருவரும் கஷ்டப்பட்டு கயிறு கட்டுகளை அவிழ்த்தனர். இருவரும், நடந்து சென்று ஒரு பெட்ரோல் பங்கில் சென்று அங்கிருந்தவர்களிடம் நடந்த சம்பவத்தை சொன்னார்கள். பெட்ரோல் பங்க் ஊழியர்கள் காவல் துறைக்கு தகவல் கொடுத்தார்கள். காவல் துறையினர் கொள்ளையடித்தவர்களை கண்டுபிடிக்க தீவிரமாய் விசாரித்து வருகிறார்கள்.



நாம் வாழ்வது, கடைசி காலத்தில். ஆகவே தேவன் இயேசுவின் கிருபைக்காக காத்திருந்து, இயேசுவோடு இணைந்து வாழ்வோம். நம் ஆத்துமாவை மட்டுமல்ல நம் உடமைகளையும் காத்துக் கொள்ள அவர் கிருபை செய்வார்.

# தேவன் தரும் பரிசு



பெண்கள் பகுதி



- பொற்செல்வி ராபின்

**பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!**

என் பாசத்திற்குரிய சகோதரியே,

உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

## பெருமையை வெறுப்பவர்

ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளை (பேதைகளை) தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி, தேவன் உலகத்தில் பலவீனமானவைகளை தெரிந்து கொண்டார்.

உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். (இழிவாய் எண்ணப்படுபவர்களையும், ஏழைகளையும், அற்பமாய் எண்ணப்படுபவரையும் தேவன் இயேசு, அன்போடு அரவணைத்துக் கொள்கிறார்). மாம்சமான எவனும் (எந்த மனிதனும்) தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடிக்கு அப்படி செய்தார் என்று 1 கொரிந்தியர், முதலாவது அதிகாரத்தில் 27,28,29 வசனங்களில் வாசிக்கிறோம்.

## தாழ்மையை விரும்புகிறவர்

மனத்தாழ்மையினால் ஒருவரை ஒருவர், தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் என்று பிலிப்பியர் 2:3ம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து, (தேவன்) மனுஷர் சாயல் ஆனார்.

அவர் மனுஷரூபமாய் (உலகில் மனிதராக) காணப்பட்டு மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் (சிலுவை மரணம் வரைக்கும்) கீழ்ப்படிந்தவராய், தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று பிலிப்பியர் 2 : 7,8 ம் வசனங்களில் வாசிக்கிறோம். உலகத்தையும், அண்ட சராசரங்களையும், மனிதர்களையும், யாவற்றையும் உருவாக்கிய தேவன், தன்னை தாழ்த்தி இயேசு என்ற பெயரில் இவ்வுலகத்தில் வந்தார். தேவனுடைய ஆவியானவர் தான் இயேசு கிறிஸ்து. இவர் சிலுவை மரணம் வரை தன்னை தாழ்த்தினார் என்று பார்க்கிறோம். நாமும் அவரைப் போல மனத்தாழ்மையோடு நடந்து கொள்வதே தேவனுக்கு பிரியம். குடும்பத்தினரையும், மற்றவர்களையும் நாம் மதித்து நடத்த வேண்டும்.



## நீதியை விரும்புகிறவர்

தேவன் ஒருவர்தான். ஆனால், இந்த தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராக பிரிந்தும், இணைந்தும் செயல்படுபவர். பைபிளில் இயேசுவை குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆகவே நம் தேவனை திரியேக தேவன் அல்லது திரித்துவ தேவன் என்று அழைக்கிறோம். இந்த மூவரும் ஒன்றாய் இணைந்து, ஒரே தேவனாய் மாறி, பாவத்திலிருந்து

மனந்திரும்பி, பாவமன்னிப்பு பெற்றவர்களின் இதயத்தில் வந்து தங்கி அரசாளுகிறார். இந்த ரகசியம் விசேஷித்த தன்மையுடையது. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் (தேவன் இயேசு) கேட்டு, அவர்களுடைய எல்லா உபத்திரங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார் என்று சங்கீதம் 34:17ம் வசனம் கூறுகிறது. ஆகவே நீதி செய்து வாழ்வோம்.

## நீதி, நியாயம் செய்பவர்

நீர் என் நியாயத்தையும், என் வழக்கையும் தீர்த்து, நீதியுள்ள நியாயாதிபதியாய் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறீர் என்று சங் 9:4ல் தாவீது கூறுகிறார். ஆகவே கவலைப்படாதிருங்கள். நமக்கு நீதி, நியாயம் செய்யும் தேவன் உண்டு. அவர் தான் இயேசு கிறிஸ்து. அவருக்கு நாம் பயந்து நடக்க வேண்டும். பைபிளை வாசித்து, அதில் உள்ள தேவ கட்டளைகளுக்கு நாம் கீழ்படிந்து நடக்க வேண்டும். நம்மால் யாரும் பாதிக்கப்படக் கூடாது. நம்மால் யாரும் கண்ணீர் வடிக்க கூடாது. இதில் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாம் தேவ கட்டளைகளை மீறினால் தேவன் நம்மை தண்டிப்பார்.



உலக வாழ்க்கை நிரந்தரம் இல்லை. இது ஒரு நாள் முடியும். நமக்கு நிரந்தர வாழ்க்கை பரலோகத்தில் தான் உள்ளது. இயேசுவோடு, என்றென்றும் கோடிக்கணக்கான ஆண்டுகள் வாழக்கூடிய நித்திய ஜீவன் தருபவர், நம் தேவன் இயேசு மட்டுமே. ஆகவே இயேசுவையே முடிவு வரை பற்றி பிடித்துக் கொள்வோம். உண்மையுள்ளவருக்கு தேவன் தரும் பரிசுதான் நிதித்திய ஜீவன். இயேசு ஜீவகிரிடம் தருவார்.

## தொலைக்காட்சி ஊழியம் மூலம் ஆறுதல் தந்த தேவன் இயேசு

அன்பு சகோதரிக்கு,

கடந்த அக்டோபர் மாதம் 7ஆம் தேதி தமிழன் தொலைக்காட்சியில், திங்கட்கிழமை காலை 7.15 மணிக்கு ஒளிப்பரப்பான பரவச நேரம் நிகழ்ச்சியை பார்த்தேன். நான் என் கணவருடைய கொடுமையால் மிகவும் மனம் நொந்து போய், நம்பிக்கை இழந்து அமர்ந்திருந்தேன். என் கணவர் என் சம்பளத்தை பிடுங்கிக் கொள்வார். வேறு பெண்ணுக்கு கொண்டு போய் கொடுப்பார். என்னை வெறுத்து விட்டார்.

என் செலவுக்கும் பணம் தரமாட்டார். இந்த நிலையில் உங்கள் தேவ செய்தியையும், ஜெபத்தையும் தொலைக்காட்சியில் பார்த்து மிகுந்த ஆறுதல் அடைந்தேன். என் உள்ளத்தை இயேசு தேற்றி சமாதானத்தையும், நம்பிக்கையையும் தந்தார். என் வாழ்வை தேவன் இயேசு நிச்சயம் மாற்றுவார் என்று உறுதியாய் நம்புகிறேன். என்னை தேற்றிய தேவாதி தேவன் இயேசுவை மகிப்படுத்துகிறேன்.

**பெயர் வெளியிட விரும்பாத சகோதரி**
**திருவனந்தபுரம்.**



## தொலைக்காட்சி மூலம் தேவன் இயேசு செய்த நன்மை

அன்பு சகோதரர் அவர்களுக்கு,

கடந்த அக்டோபர் மாதம் 8ஆம் தேதி செவ்வாய்கிழமை அன்று காலை 7.15 மணிக்கு இமயம் தொலைக்காட்சியில் இயேசுவின் சமாதான ஊழியத்தின் மூலமாக ஒளிப்பரப்பட்ட பரவச நேரம் நிகழ்ச்சியை பார்த்தேன். நீங்கள் தேவ செய்தி கொடுத்து ஜெபித்தீர்கள். உங்கள் மூலம் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தைகள், எனது வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்தது.

**டி.ப்ளோரா எழில், வேலூர்.**



# கேள்வி பதில்

## ஏ.எஸ்.வி. ராபின்

என் வயது 47, நான் இயேசுவுக்காய் ஊழியம் செய்ய விரும்புகிறேன். ஆண்டவர் இயேசு நான் செய்யும் ஊழியத்தை அங்கீகரித்து ஆசீர்வதிப்பாரா? ஊழியத்தை எப்படி செய்ய வேண்டும்?

**எம்.ஆர். ஞானராஜ்,** சென்னை.



கர்த்தருடைய ஊழியத்தை செய்ய ஜாதி, மதம், அழகு, அந்தஸ்து, அறிவு, வயது எதுவும் தேவையில்லை. மனுஷர்கள் முகத்தை பார்ப்பார்கள், இயேசுவோ நம் இருதயத்தை மட்டும் பார்ப்பார் (1சாமு 16:7) இவ்வுலகில் எல்லா வேலையையும் விட உயர்ந்து, உன்னதமானது கர்த்தர் இயேசுவின் ஊழியம். ஆகவே, நாம் ஊழியத்தை இயேசுவுக்கு பிரியமாய் செய்வோம். உலகமெங்கும் எல்லா மக்களுக்கும் இயேசுவை அறிவிப்போம். (மாற்கு 16:15) முழுநேர ஊழியம் செய்வதை விட, ஏதாவது ஒரு வேலை, வியாபாரம், தொழில் செய்து, ஊழியம் செய்தால், ஊழியத்தை சிறப்பாய் செய்ய முடியும்.

மனுஷர் சொல்லும் ஆலோசனையை விட, கர்த்தர் சமூகத்தில் காத்திருந்து இயேசு தரும் ஆலோசனையின் படி நாம்ஊழியம் செய்ய வேண்டும். ஏனெனில் இயேசு ஆலோசனைக் கர்த்தர் (ஏசா. 9:6). பணம் சம்பாதிக்க ஊழியம் செய்ய எண்ணாமல், கிடைக்கும் பணத்தை செலவு செய்து ஊழியம் செய்வோம். ஏழைகள், திக்கற்றோருக்கு உதவி செய்து, இயேசுவை அறிவிக்க வேண்டும். ஊழியம் என்பது, பஞ்சு மெத்தை அல்ல. இயேசுவின் சிலுவைப் பாடுகளில் ஒரு பகுதியை நாம் சுமந்து ஊழியம் செய்ய நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அதில்தான் ஆண்டவர் இயேசுவின் மகிமை விளங்கும். ஊழியத்தின் நோக்கம் உண்மையான தெய்வம் இயேசு தான் என்றும், அவர் நமக்காக மரித்து, இன்றைக்கும் உயிரோடிருக்கிறார் என்பதை அறிவிக்க வேண்டும். பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் பரலோகம், நரகத்தையும் குறித்து ஜனங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டும்.

நம் மரணத்திற்கு பின் ஒரு வாழ்வு உண்டு. அது பரலோகமா, நரகமா என்பதை ஜனங்களுக்கு தெளிவாய் எடுத்துரைக்க வேண்டும். இயேசுவின் அன்பு, பரிசுத்தம் உண்மையை ஜனங்களுக்கு சொல்லி, நாமும் அப்படி வாழ வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். யோவான் 12:26ன் படி கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய் செய்தால் பிதவாகிய தேவன் நம்மை உயர்வாய் வாழவைப்பார். அதே வேளையில் ஊழியத்தை அசட்டையாய் தேவனுக்கு பிரியமில்லாமல், பாவம் செய்து சாட்சி இல்லாமல் வாழ்ந்து, செய்தால் நம்மேல் தேவ கோபம் ஏற்பட்டு சாபம் வரும். (எரே. 48:10) ஆகவே உண்மையாய் ஊழியம் செய்வதாய் இருந்தால் துணிவோடு சுறுசுறுப்பாய் ஊழியம் செய்வோம் அப்பொழுது நம்மையும், நம்மூலம் பிறரையும் ஆண்டவர் இயேசு ஆசீர்வதிப்பார். இல்லையெனில் ஊழியம் செய்யாமல் இருந்து தேவ கோபத்திற்கு தப்பித்து நம் ஆத்துமாவைக் காத்துக் கொள்வோம்.

YouTube

ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

keyword : ASV Robin, Rajlynt Robin, Porchevi Robin



உலக மக்களின்
நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்

## ஜெபித்துக்கொள்ளுங்கள்

– ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்



- ✦ திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- ✦ உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ✦ ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ✦ ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- ✦ மருத்துவமனை ஊழியம்
- ✦ தொலைக்காட்சி ஊழியம்
- ✦ உபவாச ஜெப ஊழியம்
- ✦ தொலைபேசி ஊழியம்
- ✦ மலைப்பகுதி ஊழியம்
- ✦ பத்திரிக்கை ஊழியம்
- ✦ கைப்பிரதி ஊழியம்
- ✦ புத்தக ஊழியம்
- ✦ கடித ஊழியம்
- ✦ பாடல் ஊழியம்
- ✦ மனநல காப்பக ஊழியம்
- ✦ மிஷனெரி ஊழியம்
- ✦ இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- ✦ விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்































# பிரியமானவர்களே...

## ஒன்று சேர்ந்து இயேசுவின் ராஜ்ஜியத்தை கட்டுவோம்



இந்த சிறியரில் ஒருவனுக்கு... எவைகளை செய்தீர்களோ, அவைகளை எனக்கே செய்தீர்கள் (மத் 25:40) என்ற இயேசுவின் வார்த்தையின்படி நீங்கள் எங்களோடு இணைந்து, ஏழைகளுக்கும், தேவையுள்ளோருக்கும் உதவி செய்யலாமே? இதற்குரிய பலனையும், ஆசீர்வாதத்தையும் தேவன் இயேசு உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் இவ்வுலகில் தந்து மகிழப் பண்ணுவார். தேவ கிருபையினால் நாங்கள் நிறைவேற்றி வரும் நலத் திட்டங்களை இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையின் மூலமாக நீங்கள் அறிவீர்கள்.

ஏழைகள், திக்கற்றோர், பசியினால் வாடுபவர்களுக்கு ஆறுதல் சொல்லி, உதவி செய்வது தேவன் இயேசுவின் நோக்கமாய் இருக்கிறது. திக்கற்றநிலையில் உள்ள சிறு பிள்ளைகளின், வாலிப பிள்ளைகளின் படிப்பிற்கு தேவயைான பணஉதவி, ஊனமுற்றோர்,முதியோர், ஏழைகள், நோயினால் அவதிபடுவோர் போன்றோருக்கும் இவ்வூழியத்தின் மூலம் உதவி செய்ய இயேசு கிருபை செய்கிறார். நீங்கள் இவ்வுழியத்திற்கு பண உதவி செய்து தாங்கும்படி அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் மூலம் செய்யப்படும் 18 வகையான ஊழியங்களுக்கு, மாத மாதம் பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே நீங்களும் எங்களோடு இணைந்து மாத மாதம் ரூபாய் 100 முதல் லட்சம் வரை நன்கொடை கொடுத்து இயேசுவின் ராஜ்ஜியத்தை கட்ட அன்போடு அழைக்கிறோம்.

**ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் இயேசுவின் சமாதானம் இந்தியா**

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

## உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB Tamilnad Mercantile Bank Ltd | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |



வாலிபர் பகுதி

# வெற்றி

பொற்செல்வி ராபின்

அன்பு தம்பி,
தங்கையே பரிசுத்த தேவன் இயேசுவின் இனிய பெயரால் உன்னை அன்புடன் வாழ்ததுகிறேன். தவாதி தேவனுக்கே மகிமை.

## பசுமையான மரம்

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரை தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிற தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தம் இன்றி, தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான் என்று எரேமியா 17:7,8ம் வசனங்களில் வாசிக்கிறோம். தம்பி, தங்கையே உன் வாலிபப் பிராயத்தில் ரட்சகர் இயேசுவை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொள், அப்பொழுது நீ செழிப்பாய். இயேசுவின் உதவியோடு உலகில் உள்ள பாடுகளையெல்லாம் ஜெயித்து உயர்ந்திருப்பாய்.



## இயேசுவுக்கு பிரியம்

ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், பராக்கிரமன் (யுத்த வீரன்) தன் பராக்கிரமத்தை குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம். ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம். மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக் கடவன்.

எரேமியா 9:24ல் கர்த்தர் இயேசு இவ்வாறு கூறுகிறார். ஆம், உன் ஞானம், திறமை, வீரம், உடல் பலம், பண வசதி இவைகளைக் குறித்து பெருமை அடையாதே. ஏனெனறால் தேவன் பெருமையை வெறுக்கிறார். தேவனைப் பற்றிக் கொண்டு, பைபிள் வாசித்து அவருடைய கட்டளைகளை கடைபிடித்து வாழ்வதையே அவர் சிறந்த வாழ்வாக நினைக்கிறார். ஏனென்றால், தேவன் இயேசு தான் இவ்வுலகில் கிருபை, நியாயம், நீதி செய்து உன்னை உயிர் வாழ வைப்பவர்.

## பெருமை வீழ்த்தும்

பைபிளில் 1சாமுவேல் 17-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கும் உண்மை சம்பவம் இது. பெலிஸ்தருக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே யுத்தம் நடந்தது. கோலியாத் என்ற ராட்சத ராணுவ வீரன் பெலிஸ்தருக்கு ஆதரவாக நின்றான். தன் உடல் பலத்தையும், யுத்த திரமையையும் பெரிதாய் எண்ணி பெருமையோடு யுத்த களத்தில் நின்றான். இஸ்ரவேல் மக்களில் யாருக்காவது துணிவு இருந்தால் என்னோடு யுத்தம் செய்ய வரட்டும் என்று முழங்கினான். இந்த நேரத்தில் தாவீது என்ற இஸ்ரவேல் நாட்டு வாலிபன், தேவனாகிய கர்த்தரையே தன் பலமாக நினைத்து, அவருடைய இரக்கத்தையும், ஞானத்தையும் கேட்டு துணிவு பெற்றான். தேவனுடைய பெயரை பயன்படுத்தி ஒரு கவணில் ஒரு கூழாங்கல்லை வைத்து சுழற்றி அந்த கோலியாத் நெற்றியில் அடித்து அவனை வீழ்த்தினான். அந்த ராட்சதன் இறந்தான். (1 சாமு 1-51) பெருமை உன்க்கு சிறுமையை கொண்டு வரும். பெருமை உனக்கு வேண்டவே வேண்டாம்.



தேவன் இயேசுவுக்கு உன் வாழ்வில் முதல் இடம் கொடுத்து, தேவனுக்கு முன்பாகவும், மனிதர்கள் முன்பாகவும் உன்னை தாழ்த்து, தேவன் இயேசுவின் உதவியை நாடு. அவரை தாகத்தோடு தேடு, அப்பொழுது வெற்றி உனக்கு கிடைக்கும்.

## மலைப்பகுதி ஊழியம்

நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் (எல்லா மனிதருக்கும்) சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள், விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (பாவமன்னிப்பு பெற்று பரலோகம் வரலாம்). விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான். (நரக தண்டனை பெறுவான்). என்று மாற்கு 16:15,16ல் உலகத்தை படைத்த தேவன் இயேசு கூறியிருக்கிறார். நானும், என் கணவரும் கோவை, பிள்ளையார்புரம் என்ற அந்த இவர்களுக்கு எங்களால் இயன்ற பணஉதவி, பொருள் உதவி செய்தோம். இவர்கள் அதிகம் படிக்காத ஏழைமக்கள். கிட்டதட்ட 13 ஆண்டுகளாக இந்த ஊழியத்தை செய்துவருகிறோம். இவர்களுக்கு பைபிள் கொடுத்தோம். இவர்களை சர்ச்சுக்கு போகும்படி செய்தோம்.

## கடினமான மனிதர்

மலையில் உயரே இருந்த வீடுகளுக்கு செல்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. சில இடத்தில்

தொடர் - 15

இயேசுவின் சமாதானம் ஊழியம்

# தேவன் தந்த கிருபை

பொற்செல்வி ராபின்



என் கணவர், என் கையைப் பிடித்து உயரே ஏற்றி விடுவார். நாங்கள் சென்று ஜெபித்த குடும்பங்களில் தேவன் இயேசு அற்புதங்களை செய்தார். ஒரே வீட்டில், பிரிந்து வாழ்ந்த கணவன், மனைவியை தேவன் இயேசு இணைத்து வைத்தார்.

ஒரு வீட்டில் 10 ஆண்டுகள் பிள்ளை இல்லாத கணவன், மனைவிக்கு குழந்தை பாக்கியத்தை கொடுத்தார். ஒரு வீட்டில் காலில் புண்களோடு இருந்த ஒருவருக்கு என் கணவர் புண்களைத் தொட்டு, கண்ணீரோடு ஜெபித்தார். அவருடைய மனைவி நல்லவர். ஆனால், அவரோ கடின குணமுடையவர். எங்கள் வீட்டிற்கு நீங்கள் ஜெபிக்க வரவேண்டாம் என்று கூறினார். பின்பு அவர் வீட்டிற்கு நாங்கள் செல்ல முடியாமல் போயிற்று.

- தொடரும்.

மலைப்பகுதிக்கு பல சிரமங்கள் மத்தியில், மாலை வேளைகளில் சென்று கிறிஸ்துவின் சுவிசேஷசத்தை அறிவித்தோம். அப்போது அங்கு மின்சார வசதி இல்லாமல் வீடுகளும், வழியும் இருட்டாய் இருக்கும்.

## கடினமான பாதை

கரடு முரடான பாறைகள் நிறைந்த மலையில் வீடுகள் அமைந்திருந்தன. எங்கள் காரை கீழே நிறுத்தி விட்டு, பாறைகள் மேல் ஏறி நடந்து சென்று, வீட்டில் மக்களை சந்தித்து இயேசுவின் சிலுவை அன்பைப் பற்றி கூறினோம். இயேசுவை அறியாத இவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.






# வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்) நீதிமொழிகள் 20 : 30

"நீதிமான்களோ சிங்கத்தைப் போல
தைரியமாய் இருக்கிறார்கள்"
- சொன்னவர் யார்?

சென்ற மாத சரியான விடை
யோபு 37 :24



ஆக்னஸ் லாரன்ஸ்

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.11.2013**

# இயேசுவின் சமாதானம் பெறுங்கள்

இயேசுவின் சமாதானம் மூலம் வெளியிடப்பட்ட
உடைந்த உள்ளங்களுக்கு
**பரவசப் பாடல்கள் - பாகம் - 1 ACD**
வேண்டுவோர் ரூ. 50/-ம்





இயேசுவின் சமாதானம் **பரவச நேரம்**
ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்
கொடுத்த 4தேவ செய்திகள் அடங்கிய
**DVD** பெற விரும்பினால் ரூ. 50/-ம்



பொற்செல்வி ராபின் எழுதிய
பரலோக, நரக தரிசனங்கள் அடங்கிய
**நித்திய வாழ்வின் ரகசியங்கள்**
புத்தகம் பெற விரும்புவோர்
ரூ. 30/-ஐ அனுப்பி, தபாலில்
பெற்றுக் கொள்ளுங்கள்.

எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் - 641 021,
தென் இந்தியா



Our Address
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com www.peaceofjesus.org



தொடர் - 99

ஆயத்தப்படுங்கள், ஆயத்தப்படுத்துங்கள்

# இயேசுவின் ரகசிய வருகை

பொற்செல்வி ராபின்

## உலகத்தின் ஒளி

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே, அந்த மெய்யான ஒளி என்று யோவான் 1:9ல் தேவன் இயேசுவைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. ஆனால் இவ்வுலகில் அநேகர், இயேசுவை உலகத்தை படைத்த தேவன், என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்று யோவான் : 1:11ம் வசனத்தில் வாசிக்கிறோம். இவ்வுலகம் பாவ இருள் நிறைந்தது. அக்கிரமங்கள் நிறைந்தது.

## அன்பு நிறைந்தவர்

அவருடைய நாமத்தின் மேல் (இயேசுவின் மேல்) விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைப் பேர்களோ, அத்தனைப் பேர்களும், தேவனுடைய பிள்ளைகள் ஆகும்படி அதிகாரம்(உரிமை) கொடுத்தார்இயேசுவை யார், யார் உள்ளத்தில் ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்களை தம்முடைய பிள்ளைகளாக, அவர் மிகுந்த அன்போடு ஏற்றுக் கொள்கிறார்.

இயேசுவின் அன்பு சிலுவையில் உயிரைக் கொடுத்த அன்பு. முடிவில் நம்மை பரிசுத்த பரலோகம் அதாவது சொர்க்கத்திற்கு கொண்டு சென்று, அவரோடு வைத்து வாழ வைக்கும் அன்பு.

## இரக்கம் நிறைந்தவர்

மனிதன் பாவம் செய்து தேவனை துன்பப்படுத்தினாலும், தேவன் இயேசு மிகுந்த இரக்கத்தோடு, மனிதன் திருந்தி வாழ அவகாசத்தை கொடுக்கிறார். இந்த தருணத்தை உடனேயே பயன்படுத்தி, பாவம் செய்வோர், கண்ணீர் வடித்து இயேசுவிடம் பாவமன்னிப்பை கேட்டால், நம்தேவன் இயேசு பாவங்களை மன்னித்து பரிசுத்தப்படுத்துவார். ஆனால் இயேசுவின் அன்பின் அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல், துணிகரமாய் தொடர்ந்து பாவம் செய்து, அதிலேயே மூழ்கி கிடந்தால், ஆபத்துதான். தொடர்ந்து அக்கிரமம் செய்து குடும்பத்தினரை, பிறரை வேதனைப்படுத்தினால் ஆபத்துதான். தீய செயலுக்கு தக்க தண்டனையை தேவன் இயேசு தருவார்.

தேவனுக்கு பயப்படாமல் வாழ்வோருக்கு திடீர் மரணத்தை கொடுக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. மட்டுமல்ல இவர்களை உடனே நரகத்தில் தள்ளுவார். தேவன் இயேசுவுக்கு பயந்து பரிசுத்தமாய், நல்லவராய் வாழ்வதே நமக்கு நல்லது.



தொடரும்.



திருப்புணர்வு

# பெற்றோர் - பிள்ளை

பொற்செல்வி ராபின்

எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது. (ஏசா 60 :1)

## கம்ப்யூட்டர் காலம்

இன்றைய வாலிப பிள்ளைகள் நன்றாய் கணினியை (கம்ப்யூட்டரை) இயக்குகிறார்கள். அதில் இணையதளம் மூலம் வரும் அநேக நிகழ்வுகள் நன்மைக்கேதுவாய் இருக்கிறது. ஆனாலும், வாலிபரும், கன்னியரும் அதில் மூழ்கிப் போய், அதில் கவனம் சொலுத்தவும் செய்கிறார்கள். பேஸ்புக், சாட், யூ டியூப், மூலம் நிறைய நண்பர்கள் மூலம் தங்கள் வாழ்வை சீரழிக்கிறார்கள்.

## பெற்றோரின் சுமை

பெரும்பாலும், இன்றைய பெற்றோர் இருவருமே வேலையோ, தொழிலோ, வியாபாரமோ செய்து பணம் சம்பாதிக்கும் நிலையில் உள்ளனர். குடும்பத்திற்காக அதிக மணி நேரங்கள் உழைத்து, பிள்ளைகளை உயர்வாய் வாழ வைக்க தீவிர முயற்சி எடுக்கின்றனர். அதிகமான மன உளைச்சல் ஏற்படும் சூழ்நிலையை வேலை, தொழில், வியாபாரம் செய்யும் இடங்களில், சாத்தான் இவர்களுக்கு கொண்டு வருகிறான். வீடு திரும்பும் போதே இவர்களுடைய உள்ளத்தில் பெரிய சுமை, டென்ஷன்.

## நேரம் இல்லாத சூழ்நிலை

குடும்பமாய் சேர்ந்து ஒன்றாய் அமர்ந்து உணவு சாப்பிடக்கூடிய சூழ்நிலை குறைந்து வருகிறது. வாலிப பிள்ளைகள் கல்லூரிக்கு, வேலைக்கு சென்று வீடு திரும்பும் நேரம் பெற்றோர் ஏதாவது டென்ஷன் காரணமாக பிள்ளைகளிடம் அன்பாய், நெருக்கமாய் பழக முடியாத நிலை. சில குடும்பங்களில் பிள்ளைகள் ஹாஸ்டலில் தங்கி படிக்கின்றனர். இதனாலும் பெற்றோர் பிள்ளைகள் நெருங்கி உறவாட முடியாத சூழ்நிலை.

## வாலிபர்களின் பாவங்கள்

எத்தனையோ கிறிஸ்தவ குடும்பங்களில், குடும்ப ஜெபம், தனி ஜெபம், பைபிள் வாசித்து ஜெபிக்கும் பழக்கம் இல்லை. வாலிபர்கள், நண்பர்களோடு ஊர் சுற்றுவது, உல்லாச விடுதிக்குச் சென்று, பாவத்தில் வாழ்வது, எதிர்பாலரோடு வரம்பு மீறி பழகுவது, குடிப்பழக்கம், போதைப் பழக்கம் எல்லாம் பெருகி விட்டன. தேவன் ஒருவர் உண்டு. அவர் விதித்த கட்டளையை மீறி நடப்பது பாவம் என்ற உணர்வு இல்லை. இதனால் தேவன் தரும் தண்டனை பெரியதும், பயங்கரமாய் இருக்கும் என்பதை யோசிக்க வாலிப தம்பி, தங்கைக்கு நேரமே இல்லை. இதை சிந்திக்க முடியாதபடி சாத்தான் சிந்தையை கட்டி வைத்திருக்கிறான்.

## பெற்றோரின் அன்பு, ஜெபம்

இவர்களுக்குள் இருக்கும் ஆத்துமாவை பற்றிய உணர்வும் இவர்களுக்கு இல்லை. ஆகவே, பெற்றோர் முழங்காலில் நின்று தன் பிள்ளைகளுக்காக அதிக நேரம் கண்ணீரோடு, உபவாசித்து ஜெபிக்க வேண்டும். பிள்ளைகள் பாவத்தை ஜெயித்து வர இந்த ஜெபம் மிக மிக அவசியம். சாத்தானின் தந்திரங்களை பிள்ளைகள் புரிந்து கொள்ளும்படி பெற்றோர் அவர்களுக்கு அன்போடு உபதேசம் செய்ய வேண்டும். பிள்ளைகளிடம் பெற்றோர் அன்புடன் பேசி பழக வேண்டும். அவர்கள் தவறு செய்யும் வேளையில் சண்டை போடாமல் அன்பாய் பேசும் போது தான், அவர்கள் உள்ளத்தை தேவன் இயேசு மாற்ற முடியும். இதை தேவன் இயேசு விரும்புகிறார். உங்கள் குடும்பத்தை தேவன் ஆசீர்வதிப்பாராக.

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-

**இயேசுவின் உடைந்த உள்ளங்களுக்கு சமாதானம்**

# மருத்துவமனை ஊழியம்



உயிருக்கு போராடும் உடல் நலம் இல்லாதவர்களை சந்தித்து இயேசுவைப் பற்றி அறிவித்து, ஜெபித்து, ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் பணஉதவி செய்த போது.
(இடம் : அரசு மருத்துவமனை, கோவை)

Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN